# இறையருள்
# IRAIARUL

**Volume 19 No : 2** **February 2015**



## *Editorial Board*

*Patron*

**His Excellency**

**Mar George Rajendran SDB**

*Chief Editor*

**Fr. Joseph Santhosh**

*Executive Editor*

**Mr. Soundara Raj**

*Associate Editors*

**Fr. K.J. Antony SDB**

**Mr. Edwinson**

**Mr. Berlin Athencod**



Published by

**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Printed at

**Pulari Offset Press**
**Thuckalay.**
**Ph:04651-252570**


## உள்ளே...


| | |
|---|---|
| Bishop's Message | 2 |
| Kuzhithurai Diocese | 7 |
| புதிய மறைமாவட்டம் | 8 |
| திருத்தந்தையிடமிருந்து... | 13 |
| நற்செய்தி நிலையம் | 19 |
| குழந்தை ஈசோ | 23 |
| கல்விப் பணித்தளம் | 25 |
| மிஷன் லீக் | 26 |
| இளைஞர் இயக்கம் | 27 |
| இல்வாழ்வு இயக்கம் | 29 |
| வின்சென்ட் தே பவுல் சபை | 36 |
| அருட்சகோதரர்களிடமிருந்து... | 41 |
| EDU FAIR | 42 |
| அன்பின் சங்கமம் | 43 |
| Birthdays | 45 |
| தக்கலை தீபம்-8 | 46 |
| வரலாறு அறிவோம்-9 | 50 |
| அருட்சகோதரிகள் வருகை.. | 55 |
| Bishop's Engagements | 56 |

# Bishop's Message

Dear Fathers,

Greetings from the Bishop's House!

We had stepped into this New Year 2015 with the blessings of our Saviour. One twelfth of the year is already over. Looking at the past we continue to rejoice at what God has achieved through us. Now we have begun in earnest having planned for the coming year; and well, as the hymn 'Amazing Grace,' goes, "'Tis grace has brought me safe thus far.

May I share with you news about some events that took place in our diocese in the past months.

**FAMILY SANGAMAM**

On 28th December 2014 on the feast of Holy family, families in every parish of our diocese gathered and celebrated Family Sangamam. I was glad to hear that everyone participated with 'one heart and soul' as one single family. Processions to the parish were held Uraviam-wise. All took part as one family in the Holy Qurbana and received communion. Special prayers and remembrances were held. There were also various games and competitions which were conducted. It was heartening to know that all took part enthusiastically and were happy about the Family Sangamam. Congrats to you dear fathers for having animated our families so well!

**SYNOD**

The Synod of Bishops was held from 5th to 9th January. There were 41 bishops who participated in this Synod. It was a coming together of the Syro-Malabar Church and we all felt how much we are blessed with unity and strength. It was an occasion to feel proud of our patrimony and thank God for blessing our Syro-Malabar Church in various ways. The Synod took up to discussing various concerns of our Syro-Malabar Church. Our Apostolic Nuncio His Ex. Salvatore Pennacchio visited the Synod on 9th and addressed the assembly. He

gifted the Synod with a statue of St. John Paul II. The statue of the Saint was blessed and was installed by him on the same day.

## PASTORAL COUNCIL

The first session of the Pastoral Council for the current year was held on 15th January. All the committees submitted their reports and the same were discussed and passed in the meeting. Rev. Fr. Felix presented the schedule of events for the forthcoming religious year. Rev. Fr. Joseph Nedumpuram gave news about the Conclusion of Family Year.

The main theme of the day was: "My Parish, My diocese, My duties and commitment". Rev. Fr. Tom Kunnumpuram gave an introductory talk regarding the topic and invited the members to share more ideas on how to make our faithful more people-oriented and church-oriented.

The members, both priests and lay people, brought up various issues for discussion. They highlighted the difficulties and the existence of strained inter-personal relationships which keep many away from active participation.

At the end of the meeting the Bishop expressed his deep sense of gratitude to all those who work hard for the growth of the People of God. He invited everyone to feel for the other and build up good relationships at parish level.

## CONSECRATION OF CHURCH AT ST. GEORGE MISSION, ANAYADI

The Anayadi mission is already 8 years old. But Holy Qurbana was being celebrated only on Sundays and on one or two weekdays. Currently the existing Church has been given a facelift with a new facade, renovated Madhbaha, new flooring and so on. A presbytery is also built adjacent to the Church. A residing-priest will be able to give more attention to the Parish community there.

The renovated Church was consecrated on 15th January at 5.30pm in the presence of Rev. Fr. Jose Muttathupadam, VG, other curia

members, and sisters, especially those of SABS, CMC and FCC, who had served at Anayadi mission before.

I congratulate and thank in a special way Rev. Fr. SebyManimalakandathil who oversaw the completion of the work with the guidance of Fr. VG. I also thank Rev. Fr. Jimmy and all the former priests-in-charge for developing the mission at Anayadi. Rev. Fr. Mathew Kuzhinjalil has been appointed the new Parish Priest of Anayadi mission, and Rev. Fr. Felix Arulnathan will help him as his Assistant.

## BLESSING OF SJSM CONVENT

I once again welcome and thank the SJSM sisters for having taken up residence at Anayadi to serve the mission there. Their new convent was blessed on 19th January and the sisters were formally welcomed on that day.

## PONGAL CELEBRATIONS WITH THUCKALAY FRIENDS

On the 15th of January, *Anbin*Sangamam of Thuckalay friends was held. *Anbin*Sangamam was founded by the then Bishop, George Cardinal Alencherry, to promote inter-religious dialogue, unity and peace among peoples of different faiths. Those who attended participated well in the discussions. The invited guests emphatically spoke on love and understanding that needs to lubricate our daily life in a multi-religious setting like ours.

## WELCOME TO FCC SISTERS AT SENGOTTAI MISSION

I along with Rev Fr. Jose Muttathupadam, VG, visited all the communities of Sengottai mission on 17th January. In the evening all the priests and religious with some faithful of Puliarai gathered at Pulari school and gave a formal welcome to the FCC sisters of Kanjirapally province. A short gathering was organised to felicitate the sisters. We thank Rev. Sr. Julia FCC, the Mother Provincial of the St. Thomas Province, Kanjirapally, for having sent them to participate in our mission. Sr. Julia herself personally had accompanied them to

our mission centre. The sisters for the present have rented a house at KattalaiKudiyiruppu. Initially the sisters will help out at the Pulari School and in the Social Service Society. We wish the sisters blessings of the Lord and a fruitful ministry.

**CONCLUSION OF THE FAMILY YEAR**

The Conclusion of Family Year took place on 18th January at Aseer Auditorium, Kalluvilai. In fact it was a twin celebration: the Annual Day of the Mather Jyotis coupled with the Conclusion of the Family Year. The meeting asserted the importance of the family unit in the Church and in the Diocese. The emphasis given by the Synod of Bishops on the challenges in the Christian family life was again highlighted. The meeting was chaired by the Bishop, Rev. Fr. Jose Muttathupadam, VG, and Rev. Fr . Joseph Nedumpuram. Some fathers and some sisters too participated in the meeting.

The family year had begun on 23rd February 2014 with the recitation of rosary in all the families. In order to give more attention and encouragement to the families, several programmes were conducted at the diocese-level and at the parish-level, the last being the Family Sangamam on 28th December 2014. I am grateful to Rev. Fr. Joseph Nedumpuram, and the Family Year Working Committee as well as all the fathers in the parish who executed the animation programmes. In this concluding programme, all the new families who joined the church last year were honoured and felicitated. The names of all the new office beares of Mather Jyotis were also announced.

**SECOND DEATH ANNIVERSARY OF REV. FR. PHILIP KODIANTHARA**

The Second Death anniversary of Rev. Fr. Philip Kodiantharaoccurs on 9th February. We shall have the **remembrance day** on 10th February during our Priest conference at our Minor seminary, Mukoottukal. We shall have a special Holy Qurbana on that day at 9.00am followed by priest conference. Kindly inform all the sisters and the faithful in your parish and invite them for the Holy Qurbana.

Do kindly remember him in your Holy Qurbana in the parish on 9th Feb. On 7th February the family members of Fr. Philip Kodianthara will organise Holy mass in his home parish at Kayalpuram. Fr. Philip's family would be happy to have some of us for the mass. I invite those of us who are able to be present to participate in the memorial mass organized by the family.

**MARRIAGE FUND**

The family apostolate department has begun a small project to give financial support to poor girls for their marriage. This fund would be generated from a special collection made from all the parishes when marriages are conducted. This year a poor girl from Marapaddy parish is chosen to be helped. I am also aware of some of our fathers who personally contribute towards helping poor girls for their marriage. I too strongly recommend every one to make this special collection during the weddings in your parishes and forward the money to Family Apostolate department.

**PRIEST CONFERENCE AND MINOR SEMINARY HOME DAY**

The cradle of the diocese is the minor seminary and we all need to show our love and appreciation to the staff and brothers. On 10th February the minor seminary celebrates its Home day. All the fathers, Kaikars and benefactor who are associated with the formation of the brothers in the minor seminary are invited to join the Home Day Celebrations. With this purpose in mind, the Priest conference of 10th February will be held in the Minor Seminary, Mukoottukal. We shall begin with Holy Qurbana in remembrance of Rev. Fr. Philip Kodianthara.

**IN CONCLUSION**

Dear Fathers, we will officially inaugurate the Year of Consecrated Life on 1st February. Forms of Consecrated life cannot be called as human inventions but are fruits of Divine interventions through the Holy Spirit. The Holy Spirit, "in every age shows forth the richness of the practice of the evangelical counsels through a

multiplicity of charisms. In this way too he makes ever present in the Church and in the world, in time and space, the mystery of Christ" *(VC 5; Consecrated Life in today's Church: Gospel, Prophecy, Hope. Presentation of the Logo for the 'Year of Consecrated Life').* We as privileged instruments of the Holy Spirit have the responsibility to promote the various charisms He inspires for the benefit of the life of the Church and of the whole world whom God desires to save. With this in mind may I invite you all to encourage and promote vocations to religious life.

May God who inspires change and renewal through different charisms in the Church bless our diocese too with many more religious vocations, and many willing souls to be imitators of Christ.

Yours in Jesus Christ who lived for our sake poor, obedient, and chaste,

**+George Rajendran**

Bishop of Thuckalay

**NEW ASSIGNMENTS.**

| | | |
|---|---|---|
| 1. Sebastian Manimalakandathil | - | Parish priest, Katathurai |
| 2. Fr. Mathew Kuzhijalil | - | Parish priest, Anayadi |
| 3. Fr. Joseph Thekkekadumathil | - | Study: Marriage and family counselling, CANA |
| 4. Fr. JomonMangalamadam | - | Director, KII |

**குழித்துறை மறைமாவட்ட புதிய ஆயரின்**
**திருப்பொழிவும் பதவி ஏற்பும்**

கோட்டாறிலிருந்து பிரிக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ள குழித்துறை மறைமாவட்டத்தின் ஆயராக அருட்தந்தை ஜெரோம் தாஸ் வறுவேல் அவர்கள் அறிவிக்கப்பட்டுள்ளது நாம் அறிந்ததே. அவரின் அருட்பொழிவு ஏற்றலும், பதவி ஏற்பும் வருகின்ற பிப்ரவரி, 24 அன்று சித்திரங்கோட்டில் வைத்து மாலை 4 மணிக்கு நடைபெறும்.

## KUZHITHURAI DIOCESE

As we know that the Pope Francis created a new Latin rite Diocese of Kuzhithurai, carved out of the Diocese of Kottar, in Kanniyakumari District.The triple events, namely, the establishment of the new Diocese of Kuzhithurai bifurcated from the Diocese of Kottar, the Episcopal Ordination of Msgr.P. Jerome DhasVaruvel sdb and his installation as its first Bishop, which are to be held **on 24 February 2015, at 4.00pm in Chithirancode**. It is indeed a rare privilege that the Civil District of Kanyakumari in Tamil Nadu can boast of four Catholic Dioceses belonging to the three different ritual Churches – Kottar and Kuzhithurai for the Latin Church, Marthadom for the Syro-Malankara Church and Thuckalay for the Syro-Malabar Church. Despite the differences in liturgy, there is a sense of communion and fellowship among all the faithful in the District. Hence, it is a moment of great rejoicing as well as a time for thanksgiving for all of us. We bow our heads in humble submission to the Almighty who has made all these possible.

Together with the Priests, Religious and the Laity, I congratulate the Bishop-Designate and wish him God's choicest blessings as he begins his Episcopal ministry. Needless to say, the Diocese of Thuckalay assures prayers for the new Diocese and its Shepherd. By working together and cooperating in the various activities of the Dioceses of the District, we can renew the Church in this part of our country and bear witness to Jesus Christ. Kindly announce this great news in our parishes and invite the faithful to take part in this event at Chithirancode. I would like to invite every one of you dear fathers to be present for the consecration and installation program.

**+George Rajendran**

Bishop of Thuckalay

# இதோ ! ஒரு புதிய மறைமாவட்டம்

தமிழ் இலக்கியத்தில் நிலம் பற்றி வருணிக்கையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பகுத்துச் சொல்வார்கள். கன்னியாகுமரி மாவட்டம் பாலை நிலம் தரித்த நான் வகைதனையும் தன்னகம் கொண்ட நன்நிலம். அரணாய் காக்கும் அழகிய மலைகளும், செழுமை செறிந்தக் காடுகளும், கண்ணுக்கு விருந்தான வயல்வெளிகளும், நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் அலைகடலும், ஒரு சேரப் பொங்கும் எழில் பூமி தான் இம்மாவட்ட நிலப்பரப்பு. 16,728 சதுர கிலோ மீட்டரை உள்ளடக்கிய வளம் சூழ்ந்த நிலந்தனிலே 16,76,034 மக்கள் செல்வம். இங்கே எப்போதும் மென்தென்றலின் ஸ்பரிசத்தினை உணரலாம். 65 ஆண்டுகட்கு முன்பு வரை கேரளத்தோடு ஒட்டி இருந்ததால் இங்கு தமிழ் மொழியோடு மலையாளமும் கைகோர்த்துச் சிரிப்பதைக் கேட்டு ரசிக்கலாம். முக்கடல் சங்கமிக்கும் குமரி மாவட்டம் கிறிஸ்தவம், இந்து, இஸ்லாம் என்ற மும்மதங்களின் சங்கமமாகத் திகழ்வதையும் காணலாம்.

ஏறக்குறைய 6 இலட்சம் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களைக் கொண்ட இம்மாவட்டத்துக்குள் 3 ரீதியிலான மறைமாவட்டங்கள் செயல்படுவது இதன் தனிச்சிறப்பு. மலங்கரா ரீதியில் இருக்கும் மார்த்தாண்டம் மறைமாவட்டமும் சீரோ மலபார் ரீதியிலான தக்கலை மறைமாவட்டமும் லத்தீன் ரீதியிலான கோட்டாறு மறைமாவட்டமும் இம்மாவட்டத்தின் பெருமை எனலாம். கத்தோலிக்கர்கள் எந்த ரீதியைச் சார்ந்திருந்தாலும் ஒன்றித்துச் செயல்படும் மனப்பாங்கு இங்கு போற்றுதற்குரியது. அதனை ஒரு ஆன்மீக முதிர்ச்சியாகவே கருதலாம்.

இம்மாவட்டத்தில் கிறிஸ்தவ சமயம் இன்று நேற்று பூத்ததல்ல. கி.பி. 52 இல் கிறிஸ்துவின் பன்னிரு சீடருள் ஒருவரான தோமா இந்தியா வந்த காலந்தொட்டே இம்மண்ணில் வேரூன்றியது. நம் முன்னோர் திருத்தூதர் தோமாவால் சந்திக்கப்பட்டு நற்செய்தி அறிவிக்கப்பட்டனர். அவராலே அமைக்கப்பட்ட குருசடிகள், சிற்றாலயங்கள் இன்னும் பல நம் மத்தியில் உள்ளன. அவரால் கட்டப்பட்டு இன்று தேசிய சுற்றுலாத் தலமாகத் திகழும் திருவிதாங்கூர்

"அரைப்பள்ளி" நம் அனைவரின் மனதையும் ஈர்ப்பதாக அமைந்துள்ளது. அதன் பின் இந்தியா வந்த போர்த்துகீசிய மறைப்பணியாளர்கள் கண் துஞ்சாது, பசி நோக்காது நற்செய்தி அறிவிப்புப் பணியில் ஈடுபட்ட வரலாற்றையும் நாம் நன்கு அறிவோம்.

இச்சூழலில் 1542-ஆம் ஆண்டில் இந்தியாவின் கோவா வந்த இயேசு சபைத் துறவியான பிரான்சிஸ் சேவியர் குமரி மாவட்டத்தில் வந்து நம் மறைபரப்புப் பணியைத் தொடர்ந்தார். பள்ளம் முதல் பூவார் வரை வசித்த கடலோர மக்களைச் சந்தித்து கிறிஸ்துவைப் பறைசாற்றினார். இதனால் கத்தோலிக்கம் வேகமாக வளர்ந்தது. அவர் மறைக்கல்வியை அறிமுகம் செய்ததோடு திண்ணைக்கல்வி முறையையும் புகுத்தினார். இதனால் மக்கள் கல்வியறிவு பெறலாயினர். அவர் திருப்பலி நிறைவேற்றுவதற்கெனக் கட்டிய தூய மரியன்னை சிற்றாலயம் இன்னும் கோட்டாறு பேராலயத்தின் உட்புறம் எழிலுற காட்சியளிப்பதைக் காணலாம்.

ஐரோப்பிய நாடுகளிலிருந்து 1622-ஆம் ஆண்டுதொட்டே பல மறைப்பணியாளர்கள் இங்கு வந்ததோடு குமரி மாவட்டத்தின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று நற்செய்திப் பணியாற்றியதற்குப் பல சான்றுகள் உள. அதனால் பல சமூகத்தைச் சார்ந்தவர்கள் கிறிஸ்துவில் நம்பிக்கைக் கொண்டு கிறிஸ்தவம் தழுவினர். இக்காலத்தில் வியாபார நோக்குடன் வந்த ஆங்கிலேயர், போரிட்டு நாடு வெல்ல வந்த டச்சுப் படையினர், கிறிஸ்துவைப் பற்றி எடுத்துரைக்கத் தவறவில்லை. அவ்வாறு கைது செய்யப்பட்ட பெனடிக்ட் டிலனாய் என்ற டச்சுத் தளபதியினால் நீலகண்ட பிள்ளை என்ற அமைச்சர் திருமுழுக்குப் பெற்று லாசர் என்றப் பெயரேற்று கத்தோலிக்க மறையைத் தழுவினார். இதனால் அவர் அடைந்த இன்னல்களுக்கும் சித்திரவதைகளுக்கும் அளவே இல்லை. இறுதியில் 14 ஜனவரி 1752 அன்று ஆரல்வாய்மொழி காற்றாடிமலையில் சுட்டுக் கொல்லப்பட்டார். அந்த வீர விசுவாசி பிறந்தது புதிதபாய் பிறந்துள்ள குழித்துறை மறைமாவட்டத்திலுள்ள நட்டாலம் என்ற சிற்றூரில் தான்.

இதனால், 18 - ஆம் நூற்றாண்டில் குமரி மாவட்டத்தின் உள்நாட்டுக் பகுதிகளில் கிறிஸ்தவம் வேகமாகப் பரவியது.

வேங்கோடு, காரங்காடு பகுதிகள் கிறிஸ்தவர்களின் மையங்களாயின. கேரளாவின் வராப்புழா மறைமாவட்டத்தில் பணியாற்றிய போர்த்துகீசிய மறைபணியாளர்கள் குமரி மாவட்டத்தில் 7 பங்குகளை அமைத்து அர்ப்பணத்தோடு பணியாற்றியுள்ளனர். 1853-ல் கொல்லம் மறைவட்டப் பணித்தளமானபின் பெல்ஜியம் நாட்டு கார்மேல் துறவியர் கோட்டாறு பகுதியை ஒரு மையமாகக் கொண்டு கடுமையாக உழைத்தனர். 1886-ஆம் கொல்லம் புதிய மறைமாவட்டமான பின்பு அதன் தென்பகுதியான கோட்டாறும் அதைச் சூழ வாழ்ந்த கத்தோலிக்கரும் பிற சமயத்தவரும் குருக்களின் பணிகளை அளப்பரிய விதமாகப் பெற்றனர்.

கத்தோலிக்கம் கண்ட வளர்ச்சியில் 26-05-1930 அன்று கோட்டாறு தனி மறை மாவட்டமாகவும் அதன் முதல் ஆயராக மேதகு லாரன்ஸ் பெரேராவும் நியமிக்கப்பட்டார். 95,000 கத்தோலிக்கரும் 25 பங்குகளும் 32 குருக்களுமாக உருவாக்கப்பட்ட கோட்டாறு மறைமாவட்டம் தனது 85-ஆவது ஆண்டாம் தற்போது 5,43,789 இறைமக்களோடு 295 குருக்களையும் பெற்று பூரித்து நிற்கின்றது. இம்மறைமாவட்டத்தில் கத்தோலிக்கர்கள் பல ரீதிகளில் அன்றாடம் வளர்வதை உணர்ந்த திருத்தந்தை புனித 2-ஆம் யோவான் பவுல் 11-11-1996 அன்று சங்கனாசேரியை உயர்மறைமாவட்டமாகக் கொண்டு சீரோ மலபார் ரீதியிலான தக்கலை மறைமாவட்டத்தையும் 16-12-1996 அன்று மலங்கரை ரீதியிலான மார்த்தாண்டம் மறைமாவட்டத்தையும் உருவாக்கினார்.

ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களைக் கொண்ட ஒரு மறைமாவட்டம் இன்னும் தனது நற்செய்தி அறிவிப்புப் பணியைச் சிறப்புற தொடர வேண்டும் என்ற நோக்கில் இப்போதைய நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 22-12-2014 அன்று கோட்டாறிலிருந்து குழித்துறையை மையமாகக் கொண்டு புதியதொரு மறைமாவட்டத்தைப் பிரகடனம் செய்துள்ளார். 2,64,222 இறைமக்களோடும் 100 பங்குகளோடும் உருவாக்கப்பட்டுள்ள இப்புதிய மறைமாவட்ட உருவாக்கம் நம் எல்லாருக்கும் மிகுந்த மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

எளிமை, ஞானம், இறைப்பற்று, கடின உழைப்பிற்கு முன்னுதாரணமாக பேரருள்தந்தை ஜெரோம் தாஸ் குழித்துறை

மறைவாட்டத்தின் முதல் ஆயராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் இப்பகுதியைச் சார்ந்த சலேசிய குரு என்பதை நினைக்கும்போது இதயம் இரட்டிப்பான மகிழ்ச்சியால் நிரம்புகின்றது. இப்போது இம்மாவட்டத்திலுள்ள 4 மறைமாவட்ட ஆயர்களுள் இருவர் சலேசிய சபைத் துறவியர் என்கின்றபோது இது துறவியர் ஆண்டில் கடவுள் தந்த இணையற்றப் பரிசு எனக் கொள்ளலாம்.

புதிய மறைமாவட்டம், புதிய ஆயர், புதிய பார்வை, புதிய அணுகுமுறைகள் யாவும் புதியன செய்யும் ஆண்டவரால் நமக்குப் புரியப்பட்டப் புதுமைகளே. இறையாட்சிப் பாதையில் குழித்துறை மறைமாவட்டம் தூய ஆவியாரால் எந்நாளும் வழிநடத்தப்பட நெஞ்சார்ந்த வாழ்த்துக்களும் ஜெபங்களும்.

+ மார் ஜார்ஜ் இராஜேந்திரன் sdb
தக்கலை மறைமாவட்ட ஆயர்

## ஆட்கடத்தலுக்கு எதிராக உலக செப தினம்

பிப்ரவரி மாதம் 8 ஆம் தேதி, செபநாளாக அனுசரிக்க திருத்தந்தை அழைத்திருக்கிறார். ஆட்கடத்தல் என்னும் ஈவிரக்கமற்ற மனிதம் தொலத்தை கொடூரத்திற்கு எதிராக செபிக்கத் திருதந்தை அழைப்பு விடுத்திருக்கிறார். அன்றைய தினம் புனித ஜோசப்பீன் பக்கீத்தா எனப்படும், புனிதையின் திருநாள் அனுசரிக்கப்படுகிறது. இவர் 1869 ஆம் ஆண்டில் சூடான் நாட்டில் பிறந்தார். அடிமையாக விற்கப்பட்ட இவர் இத்தாலியில் வந்தடைந்தார். பல கொடுமைகளுக்கும், அநீதிக்கு எதிரான போராட்டங்களுக்கும் பிறகு, துறவறம் ஏற்றார். தனது வாழ்வை, ஆட்கடத்தல் என்னும் கொடுமைக்கு எதிரான சாட்சியமாக மாற்றினார். உலகில் இன்றும், லட்சக்கணக்கிலான பிள்ளைகள் இதற்கு இத்தீமையால் வாழ்விழக்கின்றனர். இந்தியாவிலும் அன்றாடம் நடந்தேறுகிறது. மனித மாண்பை காக்கும் திருத்தந்தையின் பணியில் நாமும் பங்கேற்போம். அவரோடு இணைந்து நாமும் செபிப்போம்.



# திருத்தந்தையின் தவக்கால செய்தி

தவக்காலம் மறுமலர்ச்சியின் காலம். இது, அகில உலக திருச்சபைக்கும், கிறிஸ்தவ சமூகங்களுக்கம், ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் பொருந்தும். மேலும், இது "அருளின் காலம்" (2கொரி 6: 2).

இத்தவக்காலத்தில் சிந்தனைக்காக மூன்று விவிலிய பகுதிகளை முன்வைக்கிறேன்.

**1."ஓர் உறுப்பு துன்புற்றால் அதனுடன் மற்ற எல்லா உறுப்புகளும் சேர்ந்து துன்புறும்"** (1கொரி 12: 26) - **அகில உலக திருச்சபை**

சுயத்திற்கும் சுருங்கும் மனிதம் தொலைத்த அலட்சியவாழ்வின் மனநிலைக்குள் ஊடுருவும் வல்லமை அன்பிற்கு உண்டு. இத்தகைய அன்பை திருச்சபை சாட்சியங்கள் வழியாக நம்முன் விளம்புகிறது. ஆனால், நாம் அனுபவிக்காததைக் குறித்து சாட்சியம் அளிக்க இயலாது. கடவுளின் கருணையாலும், இரக்கத்தாலும், அணிச்செய்யப்பட்டு கிறிஸ்துவைப் போன்று மாறி, அவரைப் போன்று பணியாளர்களாக வாழப் பணிக்கப்பட்டவர்களே கிறிஸ்தவர்கள். கடைசி இரவுணவின் போது, காலடிகளைக் கழுவ பேதுரு முன் முழங்கால் இடும், இயேசுவை பேதுரு தடுக்கிறார். இயேசுவால் காலடிகள் கழுவப்பெற்றவர்களே அவரைப் போல, பணி செய்ய முடியும் என்னும் ஆன்மீகத்தின் ஆழத்தை அறியும் பேதுரு சம்மதிக்கிறார். நாமும் இயேசுவால் பாதங்கழுவப்பெற்று அவரின் பணியில் "பங்கு" (யோவா 13: 8) பெற வேண்டும்.

அதனால் இத்தவக்காலம், இயேசுவால் நாம் பணிவிடைச் செய்யப்படுவதற்காக அனுமதிக்கும் காலம். அங்ஙனம், அவ்வனுவத்தை வாழ்வில் ஏற்று நாமும் அப்பணியை பிறருக்கு செய்ய முடியும். இது, நாம் இறைவார்த்தையை கேட்கும் போதும், திருவருட்சாதனங்களை பெறும் போதும், குறிப்பாக திருப்பலியில் பங்கேற்கும் போதும் நடக்கிறது. இயேசுவின் திருவுடலை ஏற்கும் அவ்வுடலாக உருமாற்றம் அடைகிறோம். இவ்வுடலில், இதயத்தின் வாசலை பிறர்முன் மூடும் அலட்சிய வாழ்விற்கு இடமில்லை. இயேசுவின் உடலை சார்ந்திருப்போர், பிறர் முன் அலட்சியமாக இருத்தல் இயலாது. "ஓர் உறுப்பு துன்புற்றால் அதனுடன் மற்ற எல்லா உறுப்புகளும் சேர்ந்து துன்புறும்; ஓர் உறுப்பு பெருமை

பெருமை பெற்றால் அதனுடன் மற்ற எல்லா உறுப்புகளும் சேர்ந்து மகிழ்ச்சியுறும்'' (1கொரி 12: 26).

திருச்சபை புனிதர்களின் சமூக உறவுச் சமூகம். இது, திருச்சபையில் புனிதர்கள் வாழ்வதால் மட்டுமல்ல, மாறாக புனிதம் சார்ந்தவற்றின் சமூகம் என்பதாலும் கூட. இப்புனிதச்சமூகம், கடவுளின் கொடைகளின் சேகரிப்பு. இக்கொடைகளால் தொடப்பெற்றோர், அத்தொடுதலின் இன்பத்தை பிறருக்கும் அளிக்க வேண்டும் என்பதும், இப்புனிதச் சமூகத்தின் பகுதியே. இங்கே தனிமைகள் இல்லை. பகிர்தல்களே மேலோங்கி நிற்கின்றன. பெறுதலும் கொடுத்தலும் இதன் உள்ளார்ந்த இயல்பு. கடவுள் வெளிப்படுத்திய இப்புனிதச் சமூகத்தின் உறவில் பங்கேற்கும் நாம், வெகுதொலைவில் இருப்போருக்கும் கடவுளின் வழியாக கரங்களை நீட்ட முடியும். அவருடை மீட்பின் பணியில் பங்கேற்க முடியும். அங்கே, தொலைவுகள் தொலைந்து, குவலயகிராமத்தின் அங்கமாய்த் திகழ்ந்து அகில உலகத் திருச்சபையின் பகுதியாய் விளங்கிக், கடவுளின் மீட்புப்பணியில் நாமும் பங்கேற்போம்.

## 2. **''உன் சகோதரன் எங்கே?''** (தொநூ 4: 9) – **பங்குகளும் சமூகங்களும்**

அகில உலகத் திருச்சபையைக் குறித்து நாம் மேற்கூறிய அனைத்தும் ஒவ்வொரு பங்குகளுக்கும், விசுவாச சமூகங்களுக்கும் பொருந்தும். இயேசுவின் உடலின் பகுதியாக நாம் இருப்பதை உள்ளூர அனுபவிக்க இத்திருச்சபை அமைப்புகள் நமக்கு உதவுகின்றனவா? வறியோரையும், பலவீனமானவர்களையும், சமூகத்தின் கடைநிலையில் இருப்போரையும் இயேசுவின் உடலின் உறுப்புகளாக அங்கீகரிக்க நம்மால் இயல்கிறதா? இல்லை, உலகம் முழுவதையும் அன்பு செய்கிறோம் என்னும் பொய்ம்மையில் சிக்கி, வீட்டு வாசற்படியில் படுத்துக்கிடக்கும் லாசரை மறக்கிறோமா (லூக் 16: 19–31)?

என் அன்பு சகோதரர்களே, ஒவ்வொரு பங்கும், கிறிஸ்தவ சமூகவும், அன்பும் இரக்கமும் கருணையும் நிறைந்து ததும்பும் குட்டித்தீவுகளாக உருமாற்றம் அடைய நான் ஆசிக்கிறேன்.

**3. "உள்ளங்களை உறுதிப்படுத்துங்கள்?"** (தொநூ 4: 9) – **தனிநபர் கிறிஸ்தவர்கள்**

தனிநபர்களாக நாம் பலவேளையில் அலட்சிய மனநிலைக்குள் விழும் சோதனையில் விழுகிறோம். வெள்ளப்பெருக்கம், இயற்கை அழிவுகள், மனிதத் துயரம் போன்றவற்றை அன்றாடச் செய்திகளாகப் பார்க்கும் நாம், நம்மால் என்னதான் செய்ய இயலும் என்னும் மனநிலைக்குத் தள்ளப்படுகிறோம். இயலாமை என்னும் சோதனை நம்மை கீழப்படுத்துகிறது. எப்படி இத்தகைய வலுவின்மை, இயலாமை என்னும் நோய்கள் நம்மை அணுகாமல் தற்காத்துக் கொள்வது?

முதலாவதாக செபம். அகில உலகத் திருச்சபையோடு இணைந்து செபித்தல். மார்ச் 13 மற்றும் 14 ஆம் தேதிகளில் நடத்தப்படும் 24 மணிநேர செபத்தில் நாம் இணைத்து கொள்வோம்.

இரண்டாவதாக, இரக்கச்செயல்கள். திருச்சபை நடத்தும் தொண்டு நிறுவனங்களோடு சேர்ந்து செயல்படுதல். தவக்காலம் இதற்கு ஏற்ற காலம்.

மூன்றாவதாக, உலகில் நடந்தேறும் துயரங்கள், நம்மை மனமாற்றத்திற்கு அழைக்கிறது. மனிதவாழ்வின் நிலையற்றத் தன்மையை இது தெளிவாய் உணர்த்துகிறது. அதே வேளையில், நாம் பிறரை சார்ந்திருக்கிறோம் என்பதையும் இது நமக்கு தெளிவுப்படுத்துகிறது. நமது இயலாமைகளைக் குறித்தத் தெளிவுப் பெற்று, கடவுளின் அளப்பரிய கருணையின் முன் தலைகுனிவோம். நம்மால் எல்லாம் செய்ய இயலும் என்னும் வஞ்சகம் நம்மை ஆட்கொள்ளாமல் இருக்கட்டும்.

இத்தவக்காலத்தில் நாம் செபிப்போம், "இயேசுவே உமது இதயத்தைப் போன்று எங்கள் இதயங்களையும் உருமாற்றும்."

ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் கிறிஸ்தவ சமூகத்திற்கும் இத்தவக்காலம் பயன்மிக்கதாய் அமைய வாழ்த்துகிறேன். எனக்காக செபிக்க உங்களை கேட்டுக்கொள்கிறேன். எல்லாம் வல்ல ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக, அன்னைமரியா பாதுகாப்பராக!

திருத்தந்தை பிரான்சிஸ்

| |
|---|
| வத்திக்கான் 04, அக்டோபர் 2014. புனித பிரான்சிஸ் அசிசியின் திருநாளில் வழங்கியது. |

# காயங்களுக்கு மருந்தாக அமைந்த திருத்தந்தையின் இலங்கைப்பயணம்

**இலங்கையில் கிறிஸ்தவம்**



21 மில்லியன் மக்களைக் கொண்ட இலங்கையில் 72 விழுக்காடு மக்கள் பவுத்த மதத்தைச் சார்ந்தவர்கள். 12% இந்துக்கள்; 9% இஸ்லாமியர்கள்; சுமார் 7% கிறிஸ்தவர்கள் (சுமார் 6.1% கத்தோலிக்கர்கள்; 1.3% பிற கிறிஸ்தவர்கள்); 1.2 மில்லியன் கத்தோலிக்க மக்கள் 12 மறைமாவட்டங்களில் ஆயர்களின் ஆளுகைக்குள் அமைவர். கொழும்பு மட்டுமே உயர் மறைமாவட்டம். அதன் தலைவர் கர்தினால் மால்கம் ரஞ்சித்.

மக்களை சந்திக்கும் பொருட்டு அவர்கள் அளித்த வரவேற்பை ஏற்றவாறு கொளுத்தும் வெயிலில் 20 கிலோமீட்டர் தொலைவு திறந்த வாகனத்தில் பயணம் செய்தார்.

அமைதியின் தூது: திருத்தந்தை கூறியவற்றிலிருந்து...

- இந்தியப் பெருங்கடலின் முத்துப் போல இலங்கை விளங்குகிறது.
- இலங்கையில் பல ஆண்டுகளாக உள்நாட்டு போர் நிகழ்ந்து அதன்பிறகு, அமைதியை மீண்டும் கொணர்வதற்கும், போரினால் விளைந்த காயங்களைக் குணப்படுத்தவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- கடந்த கால அநீதிகளையும் போரின் விளைவாக எழுந்த பகைமை, வெறுப்பு போன்றவற்றை களைவது எளிதன்று. நன்மை செய்வதன் வழியாக, (உரோ 12: 21) அமைதி, நல்லுறவு, ஒத்துழைப்பு ஆகியை நற்பண்புகளை செயல்படுத்துவதன் வழியாக மட்டுமே இது சாத்தியமாகும்.
- இலங்கையில் நடைபெறுகின்ற நல்லிணக்க முயற்சியிலும், அமைதியிலும் சமுதாயத்தை கட்டியெழுப்பும் முயற்சியிலும்

பல மதங்கள் ஈடுபட்டுள்ளன. அவை தம் பணிகளை இன்னும் மேம்படுத்த வேண்டும்.

- அனைவரின் குரலும் கேட்க வேண்டும், அனைவரும் தங்கள் விருப்புகள், கவலைகள், தேவைகளை, பயங்கள் போன்றவற்றை எடுத்துக்கூற வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.
- தமக்குள்ளே நிலவுகின்ற நியாயமான வேறுபாடுகளை மதிக்க வேண்டும். இவ்வாறு ஒரே குடும்பமாக வாழ்ந்திட கற்றுக்கொள்ள வேண்டும்.

**மதமடுகு தூய மரியன்னை திருத்தலத்தில் கூறியவற்றிலிருந்து...**



- தமிழர்களும், சிங்களவர்களும் இலங்கையராக, ஒரே குடும்பத்தின் உறுப்பினராக, இங்கு வருகை தருகின்றனர். தமது இன்ப, துன்பங்களையும், எதிர்பார்ப்புகளையும், தேவைகளையும் அவரிடம் சமர்ப்பிக்கின்றனர்.
- இலங்கை நாட்டின் இதயத்தையே பிளந்த நீண்ட காலப்போரினால் துன்பப்பட்ட குடும்பங்கள் இன்று இங்கே பிரசன்னமாக இருக்கின்றன. பயங்கர வன்முறை மற்றும் இரத்தக்களரிகளின் ஆண்டுகளில், வடக்கிலும், தெற்கிலுமாக எத்தனையோ மக்கள் உயிரழந்துள்ளனர்.
- இத்திருத்தலத்தோடு சம்மந்தப்பட்ட துயர நிகழ்வுகளை எந்தவோர் இலங்கையரும் மறக்கவே முடியாது. இலங்கையில் ஆரம்பக் கிறிஸ்தவர்களின் வருகையோடு தொடர்புடைய, வணக்குத்துக்குரிய மரியாவின் திருவுருவம் அவரின் திருத்தலத்திலிருந்து (பாதுகாப்பு கருதி) எடுத்துச் செல்லப்பட்ட அந்தச் சோகமான நாளையும் மறக்கவே முடியாது.

- ஆனாலும், அன்னை உங்களோடு எப்போதும் இருக்கிறார். ஒவ்வோர் இல்லத்திற்கும், காயம்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் அமைதியான வாழ்வுக்குத் திரும்ப விரும்பும் அனைவருக்கும் அவர் அன்னையாக இருக்கிறார்.

**புனித யோசேப் வாஸ்**

2015 ஜனவரி 14 அன்று திருத்தந்தை பிரான்சிஸ் கொழும்பில் காலிமுகத் திடலில் வைத்து அருளாளர் யோசேப் வாசைப் புனிதர் நிலைக்கு உயர்த்தினார். இவர் 1651, ஏப்ரல் 21ஆம் நாள் இந்தியாவில் கோவாவில் பிறந்தார். காலனிய ஆதிக்கத்தின் கீழ் இருந்த நாட்களில் இவர், இலங்கைக்கு திருத்தொண்டுப்பணிக்காக சென்றார். சுமார் 24 ஆண்டுகள் அங்கு பணிபுரிந்தார். இவர் 1711, ஜனவரி 16 ஆம் நாள் உயிர் நீத்தார். இவருக்கு, முத்திப்பேறு பட்டமானது, 1995, ஜனவரி 21இல், திருத்தந்தை யோவான் பவுல் அவர்களால் இலங்கையில் வைத்து அளிக்கப்பட்டது.



---

**செப அஞ்சலி**

நமது மறைமாவட்டத்தைச் சேர்ந்த, அருட்தந்தை சுண்டலிக்காட் அவர்களின் சகோதரன் சாக்கோவும், சகோதரனின் மனைவி மரியாம்மாவும் மஸ்கட்டில் வைத்து நடந்த வாகன விபத்தில் உயிரழந்தனர். இருவருடைய நல்லடக்கச்சடங்கு 29.01.2015 அன்று ஆறுகாணியில் வைத்து நடந்தது. இருவருடைய ஆன்மாக்களுக்கும் நித்திய இளைப்பாற்றியை இறைவன் அளிக்க செபிப்பதோடு, துயரத்தில் வாடும் அருட்தந்தை ஆன்டணி அவர்களையும், உறவினர்களையும் செபத்தால் வலுப்படுத்துவோம்.

## நற்செய்தி நிலையம்

"கடவுளது சாயலாகப் படைக்கப்பட்ட புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்து கொள்ளுங்கள். அவ்வியல்பு உண்மையான நீதியிலும், தூய்மையிலும் வெளிப்படும்". (எபேசியர் 4:24)

அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்!

**விவிலியக் கலைவிழா மறைவட்ட போட்டிகள்:**

2014-2015 ஆம் ஆண்டு விவிலியக் கலைவிழா போட்டிகளில் மறைவட்ட அளவில் பரிசு பெற்ற அனைத்து மாணவ மாணவிகளுக்கும் வாழ்த்துக்கள். இப்போட்டிகளில் அதிக புள்ளிகள் பெற்ற மறைக்கல்வி நிலையங்களின் பெயர் விபரம் பின்வருமாறு:

### Arukany Forane

| Sl. No. | Parish | Points | Rank |
|---|---|---|---|
| 1 | Arukany | 158 | I |
| 2 | Pathukany | 128 | II |
| 3 | Anaimugham | 47 | III |
| 4 | Netta | 39 | |
| 5 | Mezhacode | 32 | |
| 6 | Penu Thadam | 8 | |

### Manjalumoodu Forane

| Sl. No. | Parish | Points | Rank |
|---|---|---|---|
| 1 | Manjalumoodu | 125 | I |
| 2 | kaliyal | 75 | II |
| 3 | Malaicode | 73 | III |
| 4 | Mukkuttukal | 52 | |
| 5 | Muzhucode | 30 | |
| 6 | Marappady | 22 | |

| | | | |
|---|---|---|---|
| 7 | Karode | 12 | |
| 8 | Bengiri | 12 | |
| 9 | Pallikonam | 10 | |
| 10 | Thettivilai | 5 | |

**Nithiravilai Forane**

| Sl.No. | Parish | Points | Rank |
|---|---|---|---|
| 1 | Nithiravilai | 150 | I |
| 2 | Vayalinkarai | 111 | II |
| 3 | Varuthattu | 58 | III |
| 4 | Cheenivilai | 57 | |
| 5 | Munchirai | 25 | |
| 6 | Christurajapuram | 15 | |

**Padanthalumoodu Forane**

| Sl.No | Parish | Points | Rank |
|---|---|---|---|
| 1 | Palukal | 116 | I |
| 2 | Annikkarai | 93 | II |
| 3 | Athencode | 54 | III |
| 4 | Kazhuvanthittai | 52 | |
| 5 | Padanthalumoodu | 43 | |
| 6 | Thettiyode | 40 | |
| 7 | Marthandam | 13 | |
| 8 | Kunnuvilai | 6 | |

**Thuckalay – Pilankalai Forane**

| Sl. No | Parish | Points | Rank |
|---|---|---|---|
| 1 | Nagercoil | 124 | I |
| 2 | Pilankalai | 82 | II |
| 3 | Kaisalavilai | 58 | III |

| | | | |
|---|---|---|---|
| 4 | Kattathurai | 58 | III |
| 5 | Chenamcode | 53 | |
| 6 | Paraicode | 22 | |
| 7 | Thuckalay | 11 | |
| 8 | Kalluvilai | 4 | |
| 9 | Kulasekharam | 3 | |
| 10 | Anayadi | 2 | |

**Soosaipuram Forane**

| Sl. No. | Parish | Points | Rank |
|---|---|---|---|
| 1 | Soosaipuram | 106 | I |
| 2 | Mangarai | 103 | II |
| 3 | Killiyoor | 97 | III |
| 4 | Palappallam | 73 | |
| 5 | Pilankarai | 20 | |
| 6 | Mathapuram | 11 | |
| 7 | Thackalivilai | 6 | |

மறைமாவட்ட கலைப்போட்டிகள்:

2014-2015 ஆம் ஆண்டு மறைமாவட்ட விவிலியக் கலைவிழா கலைப்போட்டிகள் ஜனவரி மாதம் 15 ஆம் தேதி வியாழக்கிழமை அன்று படந்தாலுமூட்டில் நடைபெற்றது. காலை 9.30 மணிக்கு நமது குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் துவக்க விழாவானது ஆரம்பமானது.

நாகர்கோவில் மறைக்கல்வி மாணவிகள் இறைவணக்கப் பாடல் பாடினார். ஊக்குவிப்பாளர் திரு. வின்செென்ட் அவர்கள் கலைவிழாவின் துவக்க விழாவிற்கு வந்திருக்கும் குருகுல முதல்வர் அவர்களையும் மற்றும் அனைவரையும் வரவேற்று பேசினார். தொடர்ந்து நமது குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் குத்து விளக்கேற்றி கலைவிழாவை

தொடங்கி வைத்தார். அதைத் தொடர்ந்து இயக்குநர் அருட்தந்தை ஜெஸ்டின் செறுவேலில் அவர்கள் அனைவரையும் வாழ்த்தி போட்டிகளுக்கான அறிவுரைகளைக் கூறினார். மறைக்கல்வியின் துணை இயக்குநர் அருட்தந்தை டோனி வேலிக்ககத்து அவர்களும் உடனிருந்தார். பாலப்பள்ளம் மறைக்கல்வி நிலைய தலைமையாசிரியை திருமதி ஜாக்குலின் நன்றி கூறினார். ஒவ்வொரு மறைவட்ட தளங்களிலிருந்து வந்துள்ள மாணவர்கள் ஆறு வரிசையாக நின்று ஆறு வண்ணக் கொடிகளை ஏந்தி நின்ற காட்சி கண்களுக்கு விருந்தளிக்கும் வகையில் அமைந்தது. போட்டிகள் அனைத்தும் 6 அரங்குகளில் வைத்து காலை 10.00 மணி முதல் 4.30 மணி வரை நடைபெற்றது. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு இறுதி விழாவில் நமது மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கினார். அதிக புள்ளிகள் பெற்ற மறைக்கல்வி நிலையங்களுக்கு சுழற்கோப்பைகள் வழங்கப்பட்டது. பாப்பரசர் கீதத்துடன் விவிலியக் கலைவிழா இனிதே முடிவுற்றது.

அருட்தந்தை ஜெஸ்டின் செறுவேலில்,
இயக்குநர்

---

**ஆனையடி ஆலயம் அர்ச்சிப்பு**

ஆனையடி திருத்தொண்டுத்தளத்தின் புதுப்பிக்கப்பட்ட ஆலயம் ஜனவரி 15 மாலை 5.00 ஆயர் அவர்கள் தலைமையில் அர்ச்சிக்கப்பட்டது. புதிய பங்குத்தந்தையாக அருட்தந்தை மாத்யூ குழிஞாலில் அவர்களும், உதவிப் பங்குத்தந்தையாக அருட்தந்தை பெலிக்ஸ் அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.





# குழந்தை ஈசோ இயக்கம்

"குழந்தாய் பணிவிலே நீ பெருமைகொள்; உன் தகுதிக்கு ஏற்ப உன்னை உன்னையே நீ மதி" (சீராக்-10:28)

**குழந்தை ஈசோ இயக்க போட்டிகள்:**

கலையின் வழியாக விவிலியம் கற்றுக்கொள்ளுதல் என்ற நோக்கத்துடன் இவ்வாண்டும் சிறமலர்களுக்கான போட்டிகள் மறைவட்ட அளவில் நடைபெற உள்ளது.

ஆறுகாணி மறைவட்டத்திற்கான போட்டிகள் பிப்ரவரி 8 அன்று ஆறுகாணியிலும் மற்ற ஐந்து மறைவட்டத்திற்கான போட்டிகள் ஜனவரி 28 அன்று படந்தாலுமூடு மறைவட்ட ஆலயத்திலும் நடைபெறும்.

**குழந்தைகள் தின காணிக்கை**

ஜனவரி 16 அன்று வாழ்த்து அட்டை கவரின் அடிப்படையில் குலுக்கல் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டது. கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டை பெற்றுக் கொண்டு காணிக்கை வழங்கிய அனைத்து நல்உள்ளங்களுக்கும் குழந்தை ஈசோ இயக்கத்தின் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

<u>குழந்தை ஈசோ கிறிஸ்மஸ் காணிக்கை வரவு</u>

**பள்ளிகள்**

| | |
|---|---|
| தூய மிக்கேல் மெட்ரிக் பள்ளி காட்டாத்துறை | 14,000 |
| ஜாண் பால் மெட்ரிக் பள்ளி குலசேகரம் | 13,500 |
| எ.பி.ஜெ.ம் மெட்ரிக் பள்ளி சூசைபுரம் | 10,815 |

**சூசைபுரம் மறைவட்டம்**

| | |
|---|---|
| மாங்கரை | 3855 |
| கிள்ளியூர் | 2395 |
| சூசைபுரம் | 1660 |
| தக்காளிவிளை | 1400 |
| பிளாங்கரை | 1100 |

| | |
|---|---|
| பாலப்பள்ளம் | 1000 |
| மாதாபுரம் | 400 |

**தக்கலைபிலாங்காலை மறைவட்டம்**

| | |
|---|---|
| நாகர்கோவில் | 2850 |
| பிலாங்காலை | 2500 |
| பரைக்கோடு | 1736 |
| காட்டாத்துறை | 1720 |
| கல்லுவிளை | 1200 |
| கைசாலவிளை | 1172 |
| சேனங்கோடு | 575 |
| ஆனையடி | 300 |

மஞ்சாலுமூடு மறைவட்டம்

| | |
|---|---|
| முழுக்கோடு | 2570 |
| களியல் | 1900 |
| மஞ்சாலுமூடு | 1761 |
| மாறப்பாடி | 1725 |
| பென்கிரி | 1070 |
| முக்கூட்டுக்கல் | 1041 |
| மாலைக்கோடு | 1040 |
| பள்ளிக்கோணம் | 820 |
| காரோடு | 540 |
| தெற்றிவிளை | 180 |

**படந்தாலுமூடு மறைவட்டம்**

| | |
|---|---|
| பளுகல் | 1440 |
| அண்ணிக்கரை | 1170 |
| கழுவன்திட்டை | 834 |
| தெற்றியோடு | 690 |

| | | |
|---|---|---|
| படந்தாலுமூடு | 315 | |

**ஆறுகாணி மறைவட்டம்**

| | | |
|---|---|---|
| நெட்டா | | 760 |
| மேழக்கோடு | 600 | |
| அணமுகம் | 560 | |
| பத்துகாணி | 515 | |
| ஆறுகாணி | 450 | |
| பேணு | | 301 |

**நித்திரவிளை மறைவட்டம்**

| | |
|---|---|
| நித்திரவிளை | 1500 |
| முஞ்சிறை | 1150 |

அருட்தந்தை ஜோமோன் மங்கலாமடத்தில்,

இயக்குநர்

## கல்வி பணித்தளம்

**கார்மல் ஜோதி பள்ளி ஆண்டுவிழா**

குளச்சல் கார்மல் ஜோதி மெட்ரிக் பள்ளியின் 15வது ஆண்டுவிழா 22 ஜனவரி மாலை 5.00 மணிக்கு பள்ளி



வளாகத்தில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினர்கள் அனைவரும் குத்துவிளக்கேற்ற, தலைமையாசிரியை அறிக்கை சமர்ப்பிக்க, தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்கள் சிறப்புரையாற்றினார். பள்ளி சாவறா மண்டல தலைவி அருட்சகோ விஜி அவர்கள் தலைமையுரையும், கன்னியாகுமரி அலகின் CID திரு. சகாய ராஜ் அவர்கள் வாழ்த்துரையும் வழங்கினர். மாணவ மாணவிகளின் கண்கவர் கலைநிகழ்வுகளும் நடைபெற்றது. பல்வேறு பரிசுகளும் வழங்கப்பட்டது.

# சிறுமலர் மிஷன் லீக்

## சிறுமலர்களின் அணிவகுப்பு

சிறுமலர் மிஷன் லீக் உறுப்பினர்களின் றாலி என்னும் நம்பிக்கை நடைபயணம் ஜனவரி 25 ஞாயிறு பிற்பகல் 2.30 மணிக்கு கல்லுவிளையிலிருந்து தொடங்கி பிலாங்காலை வரைக நடைபெற்றது. நடைபயணத்தை குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். முதலில் ஆயர், குருகுல முதல்வர், இயக்குநர், மிஷன் லீக் பொறுப்பாளர்களும் தொடர்ந்து படந்தாலுமூடு, மஞ்சாலுமூடு, நித்திரவிளை, தக்கலை-பிலாங்காலை மற்றும் ஆறுகாணி ஆகிய மறைவட்டங்களும் வரிசையாக மிஷன் லீக் கோஷம் எழுப்பிக்கொண்டு அணிவகுத்து சென்றன. அனைத்து சிறுமலர்களும் கையில் சிவப்பு மஞ்சள்



வண்ணக் கொடியேந்தியும், விருதுவாக்குகள் பொறித்த வண்ணப் பலகைகளை ஏந்தியும், புனிதர்களைப் போல் வேடமணிந்தும் விருதுவாக்குகளை சொல்லிக்கொண்டும் இருவரிசையாகவும், ஒவ்வொரு மறைவட்டங்களும் வாகனங்களில் "என் குடும்பம் திருக்குடும்பம்", "உலகம் விழித்தெழ" என்ற சிந்தனைகளிலும் அலங்கரிக்கப்பட்டு சென்று பிலாங்காலை சிறுமலர் மறைவட்ட ஆலயத்தை வந்தடைந்தன. அங்கு பிலாங்காலை மறைவட்ட முதன்மைத் தந்தை லூக்கா கொல்லம்பறம்பில் அவர்கள் பொன்னாடை போர்த்தி ஆயரை வரவேற்றார். தொடர்ந்து ஆயர் அவர்கள் நிறைவுரையும், இயக்குநர் அவர்கள் நன்றியுரையுமாற்றினர். தொடர்ந்து சிற்றுண்டி வழங்கப்பட்டது. சுமார் 800க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

அருட்தந்தை ஜினோயி தோமஸ்,
இயக்குநர்

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

**மாணவர் ஊக்குப்படுத்துதல் முகாம்**

பள்ளி மாணவர்களுக்கான ஊக்குவித்தல் முகாம் ஜனவரி 2 மற்றும் 3 ஆகிய இருநாட்கள் களியல் பள்ளியில் நடைபெற்றது. இம்முகாமில் கேட்டல், பயில்தல் நுணுக்கங்கள் மற்றும் சிந்தனைகளை வளர்த்தல், விளையாட்டுப் பயிற்சிகள், பாடல்கள் பயிற்றுவிக்கப்பட்டது. நிறைவு நாளன்று கல்விசார் கண்காட்சியும் காண்பிக்கப்பட்டது.ஏராளமான மாணவர்கள் பங்கேற்று பயனடைந்தனர்.



**வேலை வாய்ப்பிற்கான திறன் வளர் பயிற்சி அறிக்கை**

தக்கலை மறைமாவட்டத்தின் இளைஞர் இயக்கம் மற்றும் தொன்போஸ்கோ வழிகாட்டி நிறுவனம் இணைந்து வேலை வாய்ப்பிற்கான திறன்வளர் பயிற்சி ஆறுகாணி மற்றும் மஞ்சாலுமூடு மறைவட்டத்திற்கு முக்கூட்டுக்கல் திருக்குடும்ப மேனிலைப்பள்ளியில் வைத்து ஜனவரி 4 அன்றும், தக்கலை பிலாங்காலை மற்றும் சூசைபுரம் மறைவட்டத்திற்கு கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் வைத்து 11.01.2015 அன்றும் நடத்தப்பட்டது. இதில் ஆறுகாணி, மஞ்சாலுமூடு, தக்கலை மற்றும் சூசைபுரம் மறைவட்ட இளைஞர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை திருச்சி வழிகாட்டி இயக்குநர் அருட்தந்தை பேட்ரிக் SDB அவர்கள் தலைமையேற்று வழிநடத்தினார்கள். அருட்தந்தை பெலிக்ஸ் SDB இயக்குநர் TCYM, Mr. டிக்சன் ராஜா அவர்களும்



முகாமை வழி நடத்தினார்கள். இதில் ஆளுமைத்திறனை வளர்த்துக்கொள்வது பற்றியும், சுயவிவரப் பட்டியல் தயாரிப்பது, நேர்முகத் தேர்வை எதிர்கொள்வது, போட்டித் தேர்வை எதிர்கொள்வது, Soft Skills போன்றவை பற்றி விளக்கினார்கள். கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் உள்ள துறைகளைப் பறறியும் தெரிவித்தார்கள். சுமார் 85 இளையோர்கள் கலந்து கொண்டனர். இரத்த தானம் கொடுக்க ஆர்வமுள்ளோர்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டன.

வாழ்க்கை வழிகாட்டும் கல்விசார் கண்காட்சி




வகுப்பு 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு எத்துறையை தேர்ந்தெடுக்கலாம், என்னென்ன படிக்கலாம் என்பதை தேர்ந்தெடுக்கும் விதமாக பள்ளி மாணவர்களுக்கு ஜனவரி 3 அன்று களியல் பள்ளியிலும் ஜனவரி 25 காலை முழுக்கோடு பள்ளியிலும், மாலை முக்கூட்டுக்கல் திருக்குடும்ப மேனிலைப் பள்ளியிலிலும நடைபெற்றது.

வரவிருக்கும் நிகழ்வுகள்

பிப்ரவரி 8 ஞாயிறு அன்று மறைவட்ட அளவில் இளைஞர்களுக்கான வாழ்வியல் பயிற்சி அன்பும் நட்பும் என்ற சிந்தனையில் படந்தாலுமூடு திருஇருதய மறைவட்ட ஆலயத்தில் காலை 9.00 மணிமுதல் மாலை 3.00 மணி வரை நடைபெற உள்ளது. சென்னை வெளிச்சம் இயக்குநர் திருமதி ஷெரின் மற்றும் இயக்குநர் அருட்தந்தை பெலிக்ஸ் அவர்கள் வகுப்புகளை வழிநடத்துகிறார்கள்.

பிப்ரவரி 15 படந்தாலுமூடு மற்றும் நித்திரவிளை மறைவட்ட இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு மற்றும் திறன் வளர் பயிற்சி படந்தாலுமூடு மறைவட்ட ஆலய அரங்கில் நடைபெறுகிறது.

அருட்தந்தை பெலிக்ஸ்
இயக்குநர்